## February 25, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவில் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

(i) கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரத்தில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிதாக கட்டப்பட்டுள்ள 90 வீடுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

2. பிரதமர் நரேந்திர மோடி இரு நாள் பயணமாக புதன்கிழமை (பிப். 25) இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

(i) அமெரிக்கா-ஈரான் மோதல் போக்கால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர்ச் சூழல் நிலவுகிறது. இந்தச் சூழ்நிலையில் பிரதமரின் இஸ்ரேல் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

(ii) இந்தப்பயணத்தின்போது இஸ்ரேல் அதிபர் ஐசக்ஹெர்சாக், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோரைச் சந்திக்கும் பிரதமர் மோடி, அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் உரையாற்ற இருக்கிறார். இரு நாடுகள் இடையிலான பாதுகாப்பு, வர்த்தகப் பேச்சு வார்த்தைகளிலும் அவர் பங்கேற்கிறார். காஸா உள்பட மத்திய கிழக்கில் நிலவும் பிரச்னைகள் குறித்து இஸ்ரேல் தலைவர்களுடன் பிரதமர் விவாதிக்க இருக்கிறார்.

(iii) இதற்கு முன்பு கடந்த 2017 ஜூலை யில் அவர் இஸ்ரேல் சென்றார்.

(iv) அறிவியல் தொழில்நுட் பம், புத்தாக்க நடவடிக்கைகள், ராணு வம், தேசப் பாதுகாப்பு, வர்த்தகம், முத வீடு, வேளாண்மை, நீர் மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் இரு நாடுகளும் ஒப்பந்தங்களை மேற் கொண்டுள்ளன. இந்தியாவின் அதித வீன வான் பாதுகாப்பு அமைப்பான சுதர்சன சக்கரம் திட்டத்தில் இஸ்ரே லின் அயர்ன் டோமி வான் பாதுகாப்பு அமைப்பின் சில நுட்பங்கள் பயன் படுத்தப்பட இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

3. வானில் பறந்து செல்லும் இந்தியாவின் முதல் மின்சார ஏர் டாக்சியை உருவாக்குவதற்காக, உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான 'என்விடியா' உடன் சென்னையைச் சேர்ந்த 'தி இ-பிளேன்' எனும் வான்போக்குவரத்து ஸ்டார்ட்-அப் நிறுவனம் முக்கிய ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

(i) 'இ200எக்ஸ்' என பெயரிடப்பட்டுள்ள இந்த அதிநவீன ஏர் டாக்சியின் வடிவமைப்பு, பரிசோதனை மற்றும் தானியங்கி திறன்களை விரைவுபடுத்த இக்கூட்டணி பெரிதும் உதவும் என்று கூறப்பட்டுள்ளது.

(ii) என்விடியா நிறுவனத்தின் அதிநவீன 'ஆம்னிவெர்ஸ்' மென்பொருளைப் பயன்படுத்தி, இந்த ஏர் டாக்சியின் துல்லியமான மெய்நிகர் மாதிரி உருவாக்கப்பட உள்ளது.

(iii) இதன்மூலம், ஏர் டாக்சியை வானில் பறக்கவிட்டுப் பார்ப்பதற்கு முன்பாகவே, அதன் ஏரோடைனமிக்ஸ், சென்சார்களின் செயல்பாடு மற்றும் அவசரகால பாதுகாப்பு அம்சங்கள் போன்ற அனைத்தையும் கணினி மூலம் துல்லியமாகச் சோதித்து அறிய முடியும், இதனால் காலவிரயம் தவிர்க்கப்படுவதோடு, பாதுகாப்பும் முழுமையாக உறுதி செய்யப்படும்.

(iv) மேலும், இந்த ஏர் டாக்சியில் என்விடியாவின் அதிவேக கணினி அமைப்புகள் பொருத்தப்பட உள்ளன. இதன் வாயிலாக, கேமராக்கள் மற்றும் ரேடார்களில் இருந்து பெறப்படும் தரவுகளை நிகழ்நேரத்தில் பகுப்பாய்வு செய்து, தன்னிச்சையாகவும் பாதுகாப்பாகவும் முடிவுகளை எடுக்கும் திறன் இந்த வாகனத்துக்குக் கிடைக்கும். அத்துடன். இயந்திரக் கோளாறுகள் ஏற்படுவதற்கு முன்பாகவே அதனை முன்கூட்டியே கணித்து எச்சரிக்கும் தொழில்நுட்பமும் இதில் இடம்பெறவுள்ளது.

4. ஜப்பானைச் சேர்ந்த 40 முன்னணி நிறுவனங்கள் மீது சீனா கடும் ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதில் 20 நிறுவனங்கள் கருப்புப் பட்டியலிலும், மற்ற 20 நிறுவனங்கள் கண்காணிப்புப் பட்டியலிலும் சேர்க்கப்பட்டுள்ளன.

(i) ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சியின் தைவான் ஆதரவு நிலைப்பாட்டால், சீனா-ஜப்பான் உறவில் விரிசல் ஏற்பட்டது. இந்நிலையில், மிட்சுபிஷி, கவாசாகி உள்ளிட்ட 20 ஜப்பான் நிறுவனங்களுக்கு ராணுவ மற்றும் சிவில் பயன்பாட்டுக்குத் தேவையான பொருள்களை விற்க சீன நிறுவனங்களுக்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. இந்த நிறுவனங்களுடன் தற்போது நிலுவையில் உள்ள வர்த்தக நடவடிக்கைகளையும் உடனடியாக முடித்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

(ii) மற்ற 20 நிறுவனங்களுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டுமெனில், சீன நிறுவனங்கள் இனி தனித்தனியாக விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும். ஜப்பானின் ராணுவ விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

5. ரஷியாவுடனான போரில் நட்பு நாடுகள் தங்களுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும்' என உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

(i) போரின் 4- ஆம் ஆண்டு நிறைவையொட்டி கீவ் நகரில் நடைபெற்ற சிறப்புப் பிரார்த்தனையில் ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர்லெயன், பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப், டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக் சன் உள்ளிட்ட சில தலைவர்கள் பங்கேற்றனர். எனினும், முந்தைய ஆண்டுகளைப் போன்று முக்கிய மேற்கத்திய நாடுகளின் தலைவர்கள் இந்த ஆண்டு நினைவு தின நிகழ்வுகளில் நேரில் பங்கேற்கவில்லை.

(ii) ரஷியா மீதான புதிய தடைகள் மற்றும் உக்ரைனுக்கான 9,000 கோடி யூரோ கடனுதவிக்கு ஐரோப்பிய யூனியன் திட்டமிட்டிருந்த நிலையில், ரஷியாவுடன் நெருக்கம் காட்டும் ஹங்கேரி தனது 'வீட்டோ' அதிகாரத்தின் மூலம் இதற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது. மேலும், ரஷிய கச்சா எண்ணெய் விநியோகத்தை உக்ரைன் தடுப்பதாக ஹங்கேரியும் ஸ்லோவாகியாவும் குற்றஞ்சாட்டுவதால் ஐரோப்பிய நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள்டுகள் நிலவுகின்றன.

(iii) இந்நிலையில், ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றத்தில் காணொலி மூலம் உரையாற்றிய ஸெலென்ஸ்கி, '2027- ஆம் ஆண்டுக்குள் ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைவதற்கு தயாராகிவிடும். அதுவே உக்ரைனின் எதிர்காலப் பாதுகாப்புக்கு உத்தரவாதமாக அமையும்' என்றார்.

(iv) ரஷியா மீதான பொருளாதாரத் தடைகளைக் கடுமையாக்கவும், கூடுதல் வான்பாதுகாப்பு ஆயுதங்களை வழங்கவும் நட்பு நாடுகளை ஸெலென்ஸ்கி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். அதேவேளையில், ரஷிய கச்சா எண்ணெய்யைத் தொடர்ந்து வாங்கும் நாடுகள் மறைமுகமாகப் போருக்கு நிதியளிப்பதாகக் கடுமையாக விமர்சித்தார்.

6. அமெரிக்காவுடன் போர் பதற்றம் தீவிரமாகியுள்ள சூழலில், சீனாவிடமிருந்து 'சூப்பர்சோனிக்' (ஒலியைவிட வேகமாகச் செல்லும்) ஏவுகணைகளை வாங்குவதற்கு ஈரான் இறுதி கட்டப் பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளது.

(i) சீனாவின் தயாரிப்பான 'சிஎம் 302' ரக ஏவுகணைகளை வாங்குவதற்கான பேச்சுவார்த்தை கடந்த இரண்டு ஆண்டுகளாகவே நடந்து வந்தாலும், கடந்த ஆண்டு ஜூனில் இஸ்ரேலுடன் நடந்த 12 நாள் போருக்குப் பிறகு வேகம் பெற்றது. ஈரானின் பாதுகாப்புத் துறை துணை அமைச்சர் மசூத் ஒரேய் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் சீனாவுக்கு நேரில் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

(ii) ஒலியை விட வேகமாகச் செல்லக்கூடிய இந்த நவீன ஏவுகணைகள் சுமார் 290 கிலோமீட்டர் தூரம் வரை உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்டவை.

(iii) மிகத்தாழ்வாகவும், மின்னல் வேகத்திலும் பறப்பதால், கப்பல்களில் உள்ள பாதுகாப்பு ரேடார்களால் இவற்றைத் தடுப்பது மிகவும் கடினம். இது தவிர, வான் பாதுகாப்பு ஏவுகணைகள் மற்றும் செயற்கைக்

கோள்களைத் தாக்கும் ஆயுதங்களையும் சீனாவிடம் இருந்து பெற ஈரான் முயன்று வருகிறது.

(iv) ஈரானின் அணுசக்தித் திட்டங்களையும், ஏவுகணை சோதனைகளையும் கட்டுப்படுத்த அமெரிக்கா பலதடைகளை விதித்து வருகிறது.

இந்தச் சூழலில், சீனாவிடமிருந்து ஈரான் ஆயுதங்களைப் பெறுவது அமெரிக்காவின் முயற்சிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

7.அமெரிக்க விஞ்ஞானி ராபர்ட் கொடார்ட் மேற்கொண்டு வந்த பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு, அவர் வடிவமைத்து, தயாரித்த முதல் ஏவூர்தி (ராக்கெட்) 1926, மார்ச் 16-ஆம் தேதி விண்ணுக்கு சென்று சாதனை படைத்தது. அதைத்தொடர்ந்து, ஜெர்மனி வடிவமைத்த வி2 ஏவூர்தி, 1944, ஜூன் 20- ஆம் தேதி ஆய்வுப் பொருளுடன் 174 கி.மீ. தொலைவுக்கு விண்ணுக்கு சென்றது. 1957, அக். 4-ஆம் தேதி ஸ்புட்னிக்1 விண்கலத்தை ஸ்புட்னிக் பிஎஸ் ஏவூர்தி மூலம் சோவியத் ரஷியா விண்ணில் செலுத்தியது.

(i) 1957, நவ.3 ஆம் தேதி ஸ்புட்னிக் 2 விண்கலத்தின் மூலம் 'லைக்கா' என்ற நாய் முதன்முறையாக விண்வெளிக்கு சோவியத் ரஷியாவால் அனுப்பப்பட்டது. இந்த வெற்றியைத் தொடர்ந்து, 1961, ஏப். 12- ஆம் தேதி யூரி காகரின் என்ற சோவியத் ரஷிய விண்வெளிவீரர், விண்ணுக்கு சென்று பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பினார்.

(ii) இவற்றின் தொடர்ச்சியாக, 1963, நவ. 21-ஆம் தேதி இந்தியா முதன் முறையாக ஆராய்ச்சி ஏவூர்தியை விண்ணில் செலுத்தி சாதனை படைத்தது.

(iii) 1969, ஜூலை 16-ஆம் தேதி நிலவுக்கு சென்ற அமெரிக்காவின் அப்பல்லோ 11 ஏவூர்தி, முதன்முறையாக மனிதனை நிலவில் கால்பதிக்க வைத்து, மீண்டும் பூமிக்கு அழைத்து வந்தது. 1969, ஜூலை 20-ஆம் தேதி அமெரிக்க விண்வெளி வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின் இருவரும் நிலவில் இறங்கி ஆய்வு மேற்கொண்டு, சாதனை படைத்தனர்.

(iv) கலாம் கனவு:

- ஏவூர்தி கண்டுபிடிக்கப்பட்டு 100 ஆண்டுகளைத் தொடும் நிலையில், மனிதனை விண்ணுக்கு அழைத்துச் சென்று, மீண்டும் பூமிக்கு அழைத்துவரும் முயற்சியில் வெற்றிபெற இந்தியா தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது.
- 2006-ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் அகமதாபாதில் உள்ள ஃபிசிகல் ரிசர்ச் லெபாரட்டரியில் பேசிய அன்றைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். '2014- ஆம் ஆண்டில் இந்திய விண்வெளி வீரர்கள் 2 பேர் விண்ணுக்குச் சென்று, ஆய்வுகளை முடித்துக்கொண்டு, வங்காள விரிகுடா வழியாக பூமிக்கு திரும்புவதாக கனவு கண்டேன். அதேபோல, 2025, ஆக. 15-ஆம் தேதி இந்திய விண்வெளி வீரர்கள் நிலவில் கால்பதித்து, 15 நாள்கள் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்கள். அதன்பிறகு பூமிக்குத் திரும்பும்போது, அன்றைய பிரதமர் நேரில் சென்று நமது விண்வெளி வீரர்களை வரவேற்பார். அவர்களை வரவேற்க கூடியிருக்கும் பெருந்திரளில், 95 வயதை நெருங்கும் வலிமை வாய்ந்த மனிதனாக விண்வெளி வீரர்களை நெருங்கும் நபராக நானும் இருப்பேன் என்று கனவு கண்டேன்' என்று குறிப்பிட்டிருந்தார். அவரது கனவை நனவாக்க இந்தியா தொடர் முயற்சிகளை எடுத்து வருகிறது.

(v) இந்திய முயற்சி:

- சோவியத் ரஷியாவின் சோயூஸ் டி11 விண்கலத்தில் 1984, ஏப். 3-ஆம் தேதி இந்திய விண்வெளி வீரர் ராகேஷ் சர்மா, முதன்முறையாக விண்ணுக்கு சென்று பூமிக்கு திரும்பினார். அதைத்தொடர்ந்து, அமெரிக்காவின் ஆக்சிம் 4 விண்கலத்தில் 2025, ஜூன் 25-ஆம் தேதி சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு சென்று, 20 நாள்களுக்குப் பிறகு பூமிக்கு திரும்பி சாதனை படைத்தார் இந்திய விண்வெளி வீரரான சுபான்ஷு சுக்லா.

- இதன் தொடர்ச்சியாக, மனிதனை விண்ணுக்கு அனுப்பி, மீண்டும் பூமிக்கு அழைத்துவரும் 'ககன்யான்' திட்டத்தை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. இந்தியரை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்தை முன்மொழிந்துள்ளதாக அன்றைய இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் 2007, ஆக. 9-ஆம் தேதி அறிவித்திருந்தார். ரூ.12,400 கோடி மதிப்பிலான இந்த திட்டத்துக்கு இந்திய அரசும் 2009-இல் ஒப்புதல் அளித்துவிட்டது.
- ஆனாலும், திட்டத்தை செயல் படுத்தப்போவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்க 10 ஆண்டுகள் பிடித்தன. இறுதியாக, 2018, ஆக.15-ஆம் தேதி சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடி மனிதனை விண்ணுக்கு அனுப்பும் 'ககன்யான்' திட்டத்தை அதிகாரபூர்வமாக அறிவித்தார். 2021-ஆம் ஆண்டில் 'ககன்யான்' விண்கலம் இந்திய விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு செலுத்த திட்டமிடப்பட்டது.

(vi) ககன்யான் திட்டம்:

- உலக அளவில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள 'ககன்யான்' வெற்றி பெறும் போது, மனிதனை விண்ணுக்கு அனுப்பி சாதனை படைத்த நாடுகளான அமெரிக்கா, ரஷியா, சீனா வரிசையில் 4-ஆவது நாடாக இந்தியாவும் இடம்பெற்று, புதிய வரலாறு படைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தற்போதைக்கு 2027-ஆம் ஆண்டு விண்வெளி வீரர்களுடன் ககன்யான் விண்கலத்தை விண்ணுக்கு செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. பூமியில் இருந்து 400 கிமீ தொலைவுக்கு விண்கலனை அனுப்பி, 3 நாள்கள் விண் வெளியில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட பிறகு விண்வெளி வீரர்களை பூமிக்கு அழைத்துவர திட்டமிடப்பட்டுள்ளது.
- பலகட்ட ஆய்வுகளுக்குப் பிறகு, விண்ணுக்கு அனுப்புவதற்காக இந்திய விமானப் படையின் வீரர்கள் குரூப் கேப்டன்கள் பிரசாந்த் நாயர், அஜித் கிருஷ்ணன், அங்கத் பிரதாப், சுபான்ஷு சுக்லா ஆகிய 4 பேரை தேர்வுசெய்து, ரஷியாவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- மனிதர்களை ஏற்றிச் செல்லும் விண்கலத்தை செலுத்துவதற்கு முன்பாக, 3 முறை ஆளில்லா விண்கல சோதனையை மேற்கொள்ள இஸ்ரோ திட்டம் வகுத்துள்ளது.
- முதல் ஆளில்லா சோதனை விண்கலத்தை அடுத்த மாதம் விண்ணுக்கு செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆளில்லா முதல் சோதனை விண்கலனில் 'வியோமித்ரா' என்ற மனித உருவம் கொண்ட இயந்திர மனிதனை (ரோபோ) இஸ்ரோ அனுப்ப உள்ளது.
- அதிநவீன செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உதவியுடன் செயல்படும் ரோபோ, விண்வெளி வீரர்களுக்கு அளிக்கப்படும் கட்டளைகளைப் படிக்கவும், பதில் அளிக்கவும் திறன்கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இதற்கு ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளை படிக்க, புரிந்துகொள்ள, பதிலளிக்க முடியும், மனிதர்களுக்கு மாற்றாக அனுப்பப்படும் ரோபோ, விண்கல நடைமுறைகளை பகுப்பாய்வு செய்தல், காற்றழுத்தம், வெப்பநிலை போன்ற சுற்றுச்சூழல் அளவுருக்களைக் கண்காணித்தல், பயணத் தரவுகளை கண்காணிக்க சிறப்பு சென்சார்களைக் கொண்டு செல்லுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள உள்ளது.
- மேலும், இந்த ரோபோ சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அமைப்புகளை இயக்கலாம், காற்றழுத்த மாற்றங்கள் குறித்த எச்சரிக்கைகளை வெளியிடலாம் மற்றும் ஸ்விட்ச் பேனல் செயல்பாடுகளுக்கு உதவலாம். அடிப்படையில் ஒரு மனித விண்வெளி வீரர் நிறைவேற்றும் பல செயல்களை ரோபோ நிறைவேற்றும்.
- இதுதவிர, பூமியில் உள்ளகட்டளை கட்டுப்பாட்டு மையத்துடன் தொடர்புகொள்ளவும், நுண் ஈர்ப்பு சோதனைகளை மேற்கொள்ளவும், விண்வெளிப் பயணத்தின்போது உடலியல் அளவுருக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதைக் கவனிக்கவும் பயன்படுத்தப்படவுள்ளது.

(vii) வெல்லுமா சோதனை?

- நிகழாண்டுக்குள் 3 சோதனை விண்கலங்களை விண்ணுக்கு செலுத்தி வெற்றி பெற்றால் மட்டுமே, 2027-இல் விண்வெளிவீரர்களை ஏற்றிக்கொண்டு ககன்யான் விண்கலம் விண்ணுக்கு செல்ல முடியும். ககன்யான் விண்கலத்திற்கான எல்லா முன்னேற்பாடுகளையும் துரிதகதியில் செயல்படுத்தி வரும் இஸ்ரோ, அதில் முழுமையாக வெற்றி பெற முடியாமல் தவித்து வருவது விண்வெளி அறிஞர்களை வியப்படையச் செய்துள்ளது.

- ககன்யான் மனித விண் வெளிப் பயணத்தின் வெற்றியைத் தொடர்ந்து, பூமியில் இருந்து 400 கிலோ தொலைவில் இந்திய விண்வெளி நிலையத்தை (பாரதிய அந்தரீஷ் ஸ்டேஷன்) அமைத்து, அங்கிருந்து ஆராய்ச்சியை முடுக்கிவிட இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. விண்வெளி ககன்யான் விண்வெளிப் பயணத்தின் வெற்றியில் இருந்து 7 ஆண்டுகளில் இது உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அனேகமாக, 2035-ஆம் ஆண்டுக்குள் இந்திய விண்வெளி நிலையத்தை அமைக்க இஸ்ரோ திட்டம் வகுத்துள்ளது. விண்வெளி ஆராய்ச்சியில் பல மைல்கற்களைத் தொட்டுள்ள இஸ்ரோ, மேலும் பல சாதனைகளை நிகழ்த்தும் என்பதை நம்பலாம்.

8. 'கேரளா' மாநிலத்தின் பெயரை 'கேரளம்' என மாற்றம் செய்ய மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(i) தில்லியில் உள்ள புதிய பிரதமர் அலுவலகத்தில் (சேவா தீர்த்) பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட பல்வேறு முடிவுகள் குறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

- அரசமைப்புச் சட்டப் பிரிவு 3- இன் கீழ் கேரளா என்பதை கேரளம் என மாற்ற முதலாவது அட்டவணையில் திருத்தம் மேற்கொள்ள மத்திய அரசுக்குப் பரிந்துரைத்து கேரள பேரவையில் கடந்த 2024, ஜூன் மாதம் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- இதற்கு மத்திய அமைச்சரவை தற்போது ஒப்புதல் அளித்துள்ளது. இதையடுத்து, கேரளா (பெயர் மாற்றம்) மசோதா 2026 என்ற பெயரிலான மசோதாவை கேரள பேரவைக்கு குடியரசுத் தலைவர் பரிந்துரைப்பார். அந்த மசோதா மீது அரசமைப்புச் சட்டப்பிரிவு 3-இன் கீழ் கேரளம் தங்களது கருத்துகளைத் தெரிவிக்கும்.
- அதன்பிறகு குடியரசுத் தலைவரின் பரிந்துரையின் பேரில் அந்த மசோதாவை மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தவுள்ளது.

9. புற்றுநோய் மரபணு வரைபடம்

(i) ஐஐடி மெட்ராஸின் திருப்புமுனை கண்டுபிடிப்பு

- ஐஐடி மெட்ராஸின் ஆராய்ச்சியாளர்கள் இரண்டு முக்கியமான டிஜிட்டல் வளங்களை உருவாக்கியுள்ளனர்: பாரத் புற்றுநோய் ஜீனோம் அட்லஸ் (BCGA) மற்றும் பாரத் புற்றுநோய் ஜீனோம் கிரிட் (BCGG). இந்த தளங்கள் ஐந்து ஆண்டுகால தீவிர உழைப்பு மற்றும் ஆராய்ச்சியின் விளைவாகும். உலகெங்கிலும் உள்ள மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருந்து நிறுவனங்களால் பயன்படுத்த தரவுத்தளங்கள் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

(ii) ஆராய்ச்சி முறை மற்றும் நோக்கங்கள்

- மரபணு மாற்றங்களை ஆய்வு செய்வதற்காக இந்தியா முழுவதும் உள்ள மார்பக புற்றுநோய் நோயாளிகளிடமிருந்து திசு மாதிரிகளை சேகரிப்பதை இந்த திட்டம் உள்ளடக்கியது.
- முன்னதாக, இந்தியாவிற்கு அதன் சொந்த விரிவான மரபணு தரவு இல்லை, ஆராய்ச்சியாளர்கள் மேற்கத்திய நோயாளி தரவை நம்பியிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, இது எப்போதும் இந்திய மரபணு அமைப்புடன் ஒத்துப்போவதில்லை.
- இந்த வரைபடம் இந்திய நோயாளிகளுக்கு குறிப்பாக பொருத்தமான இலக்கு மருந்துகளை சிறப்பாக அடையாளம் காணவும், கண்காணிக்கவும் மற்றும் உருவாக்கவும் அனுமதிக்கிறது.

(iii) இந்தியாவில் ஆபத்தான புற்றுநோய் புள்ளிவிவரங்கள்

- தேசிய புற்றுநோய் பதிவேட்டின்படி, ஒன்பது இந்தியர்களில் ஒருவர் தங்கள் வாழ்நாளில் புற்றுநோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.
- இந்தியாவில் தற்போது சுமார் 25 லட்சம் (2.5 மில்லியன்) மக்கள் புற்றுநோயுடன் வாழ்கின்றனர்.

- 2022 முதல், இந்தியாவில் புற்றுநோய் நோயாளிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 12.8% என்ற விகிதத்தில் அதிகரித்து வருகிறது.
- உலகளவில், 20–40 வயதுடைய 1.25 கோடி பேர் ஆண்டுதோறும் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இந்தியாவில், 19–39 வயதுடையவர்களிடையே மார்பகம், தைராய்டு, வாய், நாக்கு மற்றும் குடல் புற்றுநோய்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு உள்ளது.
- இந்தியாவில் ஆண்களை விட பெண்கள் புற்றுநோயால் அடிக்கடி பாதிக்கப்படுவதாக தரவு குறிப்பிடுகிறது.

(iv) நோயறிதல் மற்றும் சிகிச்சையில் உள்ள சவால்கள்

- மரபணு பரிசோதனைக்கான செலவு சமீபத்தில் 30% முதல் 40% வரை குறைந்துள்ள நிலையில், பலருக்கு இது கட்டுப்படியாகாமல் உள்ளது.
- சோதனை முடிவுகளை பகுப்பாய்வு செய்து சிகிச்சைகளை பரிந்துரைக்க பயிற்சி பெற்ற மரபணு ஆலோசகர்கள், மூலக்கூறு நோயியல் வல்லுநர்கள் மற்றும் உயிரியல் தகவல் வல்லுநர்கள் இல்லாதது மிகவும் முக்கியமானது.
- தற்போதைய காப்பீட்டுக் கொள்கைகள் விலையுயர்ந்த மரபணு சோதனைக்கு குறைந்தபட்ச காப்பீட்டை வழங்குகின்றன, இது குறைந்த வருமானம் கொண்ட நோயாளிகளுக்கு அணுகலைத் தடுக்கிறது.
- மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சைகள் பெரும்பாலும் பெரிய நகரங்களில் குவிந்துள்ளன, இதனால் கிராமப்புற மக்கள் குறைவாகவே சேவை செய்கிறார்கள்.

(v) பரிந்துரைகள்

- ஆரம்பகால கண்டறிதல்: நோயை அதன் ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிய தாலுகா மட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் நோயறிதல் வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.
- கொள்கை ஆதரவு: நவீன புற்றுநோயியல் அனைவருக்கும் அணுகக்கூடியதாக மாற்ற மரபணு சோதனைக்கான அரசு மற்றும் காப்பீட்டு ஆதரவை அதிகரிப்பது அவசியம்.
- எதிர்காலக் கண்ணோட்டம்: ஐஐடி மெட்ராஸின் முயற்சி ஒரு "மாபெரும் பாய்ச்சல்" ஆகும், இது இந்தியா புற்றுநோயை எதிர்த்துப் போராடும் விதத்தை அடிப்படையில் மாற்றும்.